<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்</u>
<u>ஸ்ரீவில்லிபுத்தூர்</u>

**MCOP.No: 300/2022** **நாள் 23.02.2026**

**எ.ம.சா.1, திரு. சுந்தரராஜ்**

**எ.ம.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

நான் டிப்ளமோ வரை படித்துள்ளேன். கூலி வேலை பார்க்கிறேன். நாள் ஒன்றுக்கு எனக்கு சம்பளம் ரூ.400. விபத்து சம்மந்தமாக எனக்கு எதிராக தான் குற்ற வழக்கு பதிவாகியுள்ளது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனக்கு செல்லத்தகுந்த ஓட்டுநர் உரிமம்இல்லை என்றால் சரிதான். நான் ஓட்டி சென்ற இருசக்கர வாகனமானது பஜாஜ் பிளாட்டினா என்றால் சரிதான். மேற்படி என்னுடைய வாகனத்தின் பதிவெண் TN 84 B 0140 என்றால் சரிதான். விபத்தானது கோட்டையூர் – தம்பிபட்டி சாலையில் நடந்தது. எனக்கு எதிராக பாலசுப்பிரமணியன் என்பவர் இருசக்கர வாகனததை ஓட்டி வந்தார் என்றால் சரிதான். கோட்டையூர் – தம்பிபட்டி சாலையானது கிழமேல் சாலை என்றும் அந்த கிழமேல் சாலையில் தான் அவர் இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்தார் என்றால் சரிதான். மேற்படி பாலசுப்பிரமணியன் என்பவர் ஓட்டிவந்த இருசக்கர வாகனத்தின் பதிவெண் TN 84 E 1508 . நான் அதிவேமாக என்னுடைய இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்ததால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் அது சரியல்ல. நான் என்னுடைய இருசக்கர வாகனத்தை அதிவேகமான ஓட்டிவந்து விபத்தை ஏற்படுத்தியதால் நான் தான் இந்த மனுதாரர்களுக்கு விபத்து இழப்பீடு தொகை வழங்கவேண்டியது என்றால் அது சரியல்ல. விபத்து சமயத்தில் எனக்கு வயது 18 பூர்த்தி அடையவில்லை என்றால் சரிதான். எனக்கு வயது 18 பூர்த்தி ஆகவில்லை என்றும் என்னால் இருசக்கர வாகனத்தை சரியாக ஓட்டமுடியாது என்றும் அதனால் என்னுடைய அதிவேகம், அஜாக்கிரதை, கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டுள்ளது என்பதால் நான் தான் மனுதாரர்களுக்கு விபத்து இழப்பீடு தொகை செலுத்தவேண்டியது என்றால் சரியல்ல. மனுதாரர்கள் மனுவில் கோரியுள்ள விபத்து இழப்பீடு விகிதாச்சார படி நான் தான் செலுத்த வேண்டும் என்றால் அது சரியல்ல. நான்

**தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிருரை மற்றும் சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ள அனைத்தும் பொய்யானது என்றால் அது சரியல்ல.**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**
Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 23rdday of February 2026

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.